DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -29

| | | |
|---|---|---|
| Name | : திரு. செங்குட்டுவன் | Caste: |
| Father's Name: | திரு. ராமசந்திரன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 24th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A11, A13 to A18 present. A8 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**24.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, குளவடையான் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2008 ஆம் ஆண்டு நான் குருவாலப்பர் கோவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன்.

கடந்த 24.05.2008 தேதியன்று நானும், எனது கிராமஉதவியாளரான பூராசாமி என்பவரும் ஜெயங்கொண்டத்திலுள்ள உடையார்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம் செல்வதற்காக குருவாலப்பர்கோவில் கிராம பேருந்துநிறுத்தத்தில் காலை சுமார் 9.00 மணியளவில் நின்றுகொண்டிருந்தோம்.

அப்போது அந்த இடத்திற்கு வந்த மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளர் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் எங்கள் அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு நபரை பிடித்து

விசாரணை செய்தார். அந்த நபரின் பெயர் பாஸ்கரன். அந்த நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. ( எதிரி பாஸ்கரன் இன்று ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 இன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

அந்த நபர் வங்குடியில் நடந்த ஒரு கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக சொல்லி ஆய்வாளர் அவரை விசாரித்தார். அப்போது எதிரி மேற்படி கொலை வழக்கில் தானும் சம்மந்தப்பட்டிருப்பதாக சொல்லி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி பாஸ்கரன் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தின்போது அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை அதாவாது ஒரு பட்டாகத்தியை வங்குடியில் உள்ள ஒரு ரைஸ்மில்க்கு பின்புறமுள்ள சவுக்குதோப்பில் முள்புதரில் மறைத்து வைத்திருப்பதாக கூறினார். மேலும் அவர் தனது வாக்குமூலத்தில் அவரை அழைத்துசென்றால் மேற்கண்டவாறு மறைத்து வைத்துள்ள ஆயுதத்தை எடுத்து கொடுப்பதாகவும் சொன்னார்.

எதிரி பாஸ்கரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்து அதில் பாஸ்கரனிடம் கையொப்பம் பெற்றார். அந்த வாக்குமூலத்தில் சாட்சிகளாக நானும், எனது உதவியாளர் பூராசாமியும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.21.

பின்னர் ஆய்வாளர் எங்களையும், எதிரி பாஸ்கரனையும் அழைத்து கொண்டு வங்குடியிலுள்ள ரைஸ்மில்லுக்கு பின்புறம் உள்ள சவுக்குதோப்பிற்கு அழைத்து சென்றார். அந்த சவுக்குதோப்பிலிருந்த ஒரு முள்புதரில் இருந்து எதிரி பாஸ்கரன் ஒரு பட்டாகத்தியை எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார். ஆய்வாளர் அந்த பட்டாகத்தியை ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து காலை 10.00 மணிக்கு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த மகஜர் அ.சா.ஆ.22.

ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட மேற்படி பட்டாகத்தியானது என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்தியை போன்றுதான் இருந்தது. பின்னர் ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார். ஆய்வாளர் என்னையும், எனது உதவியாளரையும் விசாரணை செய்தார்.

**8–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

24.05.2008 அன்று என்ன கிழமை என்று எனக்கு நினைவில்லை. அன்றைய தினம் எனக்கு வேலைநாள் என்றால் சரிதான். வழக்கமாக எனது பணியானது காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கும். குருவாலப்பர்கோவில் கிராம பேருந்து நிறுத்தத்திலிருந்து அந்த கிராமத்தின் வி.ஏ.ஓ அலுவலகமானது சுமார் 1/2 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான்.

அந்த பேருந்து நிறுத்தம் ஜெயங்கொண்டத்திலிருந்து சிதம்பரம், கும்பகோணம் போன்ற ஊர்களுக்கு செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் குருவாலப்பர்கோவில் கிராம நிர்வாக அலுவலராக இருந்த காரணத்தினால் அந்த பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளின் அமைப்பு குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். நான் நின்றுகொண்டிருந்ததாக சொல்லும் பேருந்து நிறுத்தமானது காலை 9.30 மணிக்கு போக்குவரத்து அதிகமாக உள்ள ஒரு பகுதி என்றால் சரிதான்.

அந்த பேருந்து நிறுத்தத்திலிருந்து வங்குடிகிராமமானது சுமார் 30 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. 10 கி.மீ தூரம் தான் இருக்கும். பொதுவாக நான் எனது அலுவலகத்தைவிட்டு வெளி அலுவலாக செல்லும்போது அலுவலகத்தின் வெளியே மாட்டப்பட்டிருக்கும் தகவல்பலகையில் எழுதிவைத்துவிட்டு தான் செல்வேன். நான் வழக்கமாக காலை 9.30 மணிக்குதான் எனது அலுவலகத்திற்கு வருவேன் என்பதால் நான் மேற்படி பேருந்து நிறுத்தத்திற்கு காலை சுமார் 10.30 மணிக்கு தான் வந்திருப்பேன் என்றாலும், காலை 9.00 மணிக்கு நான் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் வருவாய் ஜமாபந்தி நடைபெற்ற காரணத்தினால் அன்றைய

தினம் நான் காலையில் சீக்கிரமாகவே அலுவலகத்திற்கு வந்துவிட்டேன் என்றும், காலை 9.00 மணிக்கு நான் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் எனது உதவியாளருடன் நின்றுகொண்டிருந்தேன் என்றும் சாட்சி சுயமாக கூறுகிறார்.

காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் என்னை சாட்சியாக இருக்ககோரி எழுத்துமூலமான கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பேருந்து நிறுத்தத்திலிருந்து நாங்கள் வங்குடிகிராமத்திலுள்ள சவுக்குதோப்பிற்கு சென்றது சம்மந்தமாக நான் எனது அலுவலக பதிவேடுகள் எதிலும் குறிப்பு எழுதவில்லை. மேற்படி பேருந்து நிறுத்தத்திலிருந்து வங்குடி கிராமமானது 30 கி.மீ தொலைவில் உள்ளது என்றாலும், அதனை மறைத்து நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து எதிரி பாஸ்கரனை நான் சொன்னதுபோல் காவல் ஆய்வாளர் கைதுசெய்யவில்லை என்றாலும், அதுபற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. நான் காவல் ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க காவல்நிலையத்திற்கு சென்று அங்கு வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து எதிரி பாஸ்கரன் எந்த வழக்கு சொத்தையும் எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தவில்லை என்றாலும், அப்படி ஆஜர்படுத்தியதாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் சொல்லிகொடுத்து பொய்யான சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**3,6 மற்றும் 13 ஆம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர். அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge, Salem.